1973 ஏப்ரல் 3]

என்னென்ன பொருட்கள் எங்கெங்கே கிடைக்கும் என்ற விபரங்களை தெரிவிப்பார்களா? அதுமட்டுமல்லாமல் 'சிட்கோ' போன்ற நிறுவனங்களில் இருந்து பாரங்களை எப்படி பூர்த்தி செய்வது, எந்தெந்த வகையில் கடனைப் பெறலாம் என்று அவர்கள் பொதுமக்களுக்கு தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டத் தகவல்களைப் போன்றவைகளை அறிவிப்பதற்கு வேறு பல துறைகள் இருக்கின்றன. அவைகள் மூலமாக அந்தத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, 'இன்ஃபர்மேஷன் சென்டர்'களில் எல்லாம் எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள்? அவர்களுக்கு ஆகும் செலவு என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒவ்வொரு தகவல் நிலையத்திற்கும் 25,000 ரூபாய் அளவுக்குச் செலவாகிறது. எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள் என்ற விபரம் இல்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த 'இன்ஃபர்மேஷன் சென்டர்'களில் தகவல் கொடுக்கக்கூடியவர்கள் ஆண்களா அல்லது பெண்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் இப்படி ஒரு கேள்விவரும் என்று அதற்கான விபரத்தைச் சேகரிக்கவில்லை.

திரு. கே. என். குமாரசாமி: விளம்பர இலாகா என்று ஒவ்வொரு ஜில்லா ஹெட்குவார்ட்டர்சிலும் இருக்கிறது. அதோடு இந்த இலாகாவை ஒன்றுபடுத்தி, ஓரே அமைப்பாக உருவாக்க அரசுக்கு யோசனை உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த தகவல் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்ற இடங்களில் அந்த இலாகாவோடு இணைந்து பணியாற்றுகிறார்கள். மற்ற இடங்களிலும் தகவல் நிலையங்கள் அமைக்கப்பட்டால் அவர்களும் விளம்பர இலாகாவோடு இணைந்து பணியாற்றும் நிலைமை ஏற்படும்.

Railway Cess Fund.

*611 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether the Railway Cess Fund for 1971–72 has been distributed among Panchayat Unions in the State; and

(*b*) if so, the details thereof?

[1973 ஏப்ரல் 3

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இரயில்வே செஸ் நிதியிலிருக்கும் பணத்தை விதிகளில் கூறப்பெற்றிருக்கும் அடிப்படை வசதிகள் செய்து தரவே பயன்படுத்த வேண்டும். அப்பணத்தை ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்துத் தர வேண்டும் என விதிகளில் இல்லை. இருப்பினும் தத்தம் மாவட்டங்களில் இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களில் பணத்தைப் பயன் படுத்திக் கொள்வதற்காக, கோவை, தென் ஆற்காடு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளர்களின் செயற்குறிப்பிற்கு ஏற்கெனவே அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இரயில்வே செஸ் நிதி எத்தனை வருஷத்திற்கு ஒரு தடவை ஒதுக்கப்படுகிறது, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அந்தப் பணம் பிரித்துக்கொடுக்கப்பட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இரயில்வே செஸ் நிதி ஏற்கெனவே சேர்ந்திருக்கிற ஒரு நிதி. அதை எப்படி பயன்படுத்துவது என்ற பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. இரயில்வே செஸ் நிதி இருக்கின்ற மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவரால் குறிப்பாக சில பல திட்டங்கள் வகுக்கப்பட்டு, அத்திட்டங்களை நிறைவேற்றுவதில் முன்னுரிமை தரவேண்டுமென்ற நோக்கம் இருக்கிறது. அந்தவகையில் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர், ஒளி விளக்கு வசதி, துவக்கப் பள்ளிக் கட்டிடங்கள், குழந்தைகள் நல இல்லங்கள், மகப்பேறு இல்லங்கள், அறிவுக் கூடங்கள், இணைப்புச் சாலைகள் போன்றப் பணிகளை வரிசைப்படுத்தி, அவைகளை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை கொடுத்து இந்த செஸ் நிதி செலவழிக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களின் பிற்பட்டத்தன்மைகளை மனதிற் கொண்டு, தயாரிக்கப்பட்டு அனுப்பப்படும் அறிக்கைகளை அரசு பரிசீலித்து ஏற்றுக்கொள்ளும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இரயில்வே செஸ் நிதியில் இரயில் இல்லாத கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் பங்குத்தொகை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த செஸ் நிதி செங்கற்பட்டு, வடாற்காடு, தர்மபுரி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு இல்லை. ஆக, கன்னியாகுமரிக்கு மட்டும் இல்லை என்றில்லை; வேறு பல மாவட்டங்களும் இருக்கின்றன.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த செஸ் நிதி கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்டு 1½ ஆண்டு ஆகிவிட்டது. ஆனால் இன்னும் ஊராட்சி ஒன்றி

யங்களுக்குப் பணம் போய்ச் சேரவில்லை. ஆகவே, உடனடியாகப் போய்ச் சேர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதற்கானக் குறிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் தரப்பட்டிருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீருக்காக 32,72,950 ரூபாயும், துவக்கப்பள்ளிகளுக்காக 9,26,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மாவட்ட ஆட்சித் தலைவரால் நடைமுறைப்படுத்தப்படும். அதிலே ஏதாவது சிரமங்கள் இருந்தால் வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் பேசித் தீர்வு காணலாம். மீதி 45,150 ரூபாய் இருக்கிறது. அதற்குத் திட்டங்கள் தயாரித்து அனுப்ப மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there is huge accumulation of railway cess fund, and Dharmapuri district has been formed into a separate district. May I know from the Hon. Minister for Education whether the amount due for Dharmapuri district will be given from the Cess Fund?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சேலம் மாவட்டமும், தர்மபுரி மாவட்டமும் ஒன்ருக இருந்தபோது இந்த செஸ் நிதி 3,70,254 ரூபாய் இருந்தது. அதற்கு தர்மபுரி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அதற்குரிய தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிருர்கள். அது மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் இருக்கிறது. அவரிடம் இருந்து அறிக்கை வந்தவுடன் அரசாங்கம் முடிவு செய்யும்.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, இரயில்வே செஸ் நிதியிலிருந்து சில மாவட்டங்களுக்குத்தான் பணம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அப்படி அனுமதிக்கப்பட்டிருக்கின்ற மாவட்டங்களில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சமமாகப் பிரித்துக்கொடுக்கும் உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இரயில்வே செஸ் நிதி என்பது, அந்தந்த மாவட்டங்களில் 'டிஸ்ட்ரிக்ட்போர்டு' இருந்தபோது சேர்ந்த நிதியாகும். 'டிஸ்ட்ரிக்ட் போர்டுகளில்' இரயில்வேயை நடத்திவந்தார்கள். பிறகு இந்திய அரசு அதை ஏற்றுக்கொண்டு, அதற்கான ஈட்டுத்தொகையை அளித்தது. அப்படி அளிக்கப்பட்ட ஈட்டுத்தொகை அந்தந்த மாவட்டங்களில் வைக்கப்பட்டது. அப்படித்தான் சில பல மாவட்டங்களில் இரயில்வே செஸ் நிதி சேர்ந்தது. ஆகவே அதை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சமமாகப் பிரிக்கும் நோக்கம் இல்லை. ஏற்கெனவே நான் அறிவித்தபடி குறிப்பிட்ட சில

பணிகளுக்காக மாவட்ட ஆட்சித் தலைவரால் இந்தப் பணம் செலவழிக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் பணித் திட்டங்களைத் தயாரிக்கும்போது அந்தந்த மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் பிற்பட்டத் தன்மையை மனதிற் கொண்டு தயாரிப்பார். அதை அரசாங்கம் பரிசிலனை செய்து எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு ஒப்பளிப்பு வழங்குகிறது.

திரு. சு. துரைசாமி : 1971-72-ம் ஆண்டில் இரயில்வே செஸ் நிதி மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு ரூபாய் கிடைத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது இரயில்வே செஸ் நிதி கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் முன்னால் ஜில்லா போர்டு இருந்த போது, சில பல ஜில்லா போர்டுகளால் இரயில்வே நடத்தப்பட்டு வந்தது. அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டபின்னால் இரயில்வே லைனுக்கு வாடகை கொடுக்கப்பட்டு வந்தது. அந்தப் பணம் செஸ் நிதியாக வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்குச் சொந்தமான இரயில்வே லைனும் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்குரிய ஈட்டுத் தொகை கொடுக்கப்பட்டது. அந்தப் பணமும் செஸ்நிதியோடு சேர்க்கப்பட்டது. அதற்குப் பின்னால் செஸ் நிதி கொடுக்கப்படவில்லை; செஸ் நிதியில் பணமும் சேரவில்லை. இது ஆண்டுக்காண்டு கொடுக்கப்படும் நிதி அல்ல. ஆகவே, ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டத் தொகைதான் இரயில்வே செஸ் நிதியில் இருக்கிறது.

பேரூராட்சி எல்லைகளுக்குள் ஏற்படும் ஆக்கிரமிப்புகள்

* 612. வினா—**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேரூராட்சி மன்ற எல்லைக்குள் வீதிகளிலும், பேரூராட்சி மன்ற சொத்துகளின் மீதும் ஏற்படும் ஆக்கிரமிப்புகளை உடனுக்குடன் நீக்க மன்றத் தலைவர்களுக்கு அதிக அதிகாரம் தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மிகக் குறுகிய வீதிகளை உடைய பேரூராட்சியில் படிகளை நீட்டித்தல், பால்கனிகளை நீட்டித்தல் ஆகிய ஆக்கிரமிப்புகள் உள்ளன. அவைகளை உடனடியாக நீக்க நிர்வாக அதிகாரிகளுக்காவது அரசு உத்தரவு தருமா ? அவர்கள் கோரினால் காவலர்களுடைய உதவியும் நிர்வாக அதிகாரிகளுக்கு அளிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆக்கிரமிப்புகளை அகற்ற பேரூராட்சி மன்றத் தலைவருக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னேனே தவிர இப்போதே விதிமுறைகளின் கீழ் நிர்வாக அதிகாரிகளுக்கும், நகராட்சி மன்ற